# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2019 மாசி மாதம் 18ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை

***“உண்மையான இறைமகனாக, அந்த இறைஅபிமானத்தை உரிமையாக்கிக் கொள்வோம்”***

01. ஆரம்பப் பாடல் இல 02 “நமோ நமோ தூய ஆவியானவரே…”

02. புகழ்ச்சிக்கான நோக்கு

- இந்த இரண்டு வருடங்களாக தூய ஆவியானவர் எம்மிடம் கேட்டு நின்ற ‘மனந்திரும்புதலுக்கு’ உள்ளாகிடும் மகா வரப்பிரசாதத்திற்கு நாம் உள்ளாகியுள்ளோம். கடந்த தினத்தில் நடைபெற்ற பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு மங்கள மகோற்சவ நிகழ்விலும், பொறுப்பாளர்களின் பாசறையிலும் எமக்கு ஆழமாக அதற்கு விழிப்புற்றவாறு உள்ளாழத்துடன் பயணம் செய்யக் கிடைத்தது.
- உண்மையாகவே இம்மனம் திரும்புதல் எமது வாழ்வின் பரிணாமத்திற்கு உள்ளாக்குகிறது அல்லவா? இதற்கு முன்னால் நாம் எமது வாழ்வில் கை வைத்திட, இடமளித்திட, விருப்பப்பட்டோமா? நாமே நம்மை பார்த்து உண்மையாகவே மாற்றத்தை ஏற்படுத்திட முயற்சி செய்கிறோம் அல்லவா? இது வரை நாம் நினைத்திருந்தது பாவசங்கீர்த்தனம் செய்தல், திருப்பலியில் கலந்து கொள்ளல் பொதுப்பணிகளில் ஈடுபடல், பக்தி முயற்சிகளை செய்தல் தான் கிறிஸ்தவ வாழ்வு என்று. அநேகமான கிறிஸ்தவர்கள் நினைத்திருப்பதும் அவ்வாறே இருப்பினும் மனம் திரும்புதல் எனும் ஆண்டவரின் வேண்டுதலுக்கு உள்ளாகுகையில் எமது வாழ்க்கை தலைகீழாக மாற்றிடும் அனுபவத்திற்கு உள்ளாகியிருக்கிறோம்.
- அதன் மூலம் நாம் பெற்றிருப்பது உண்மையாகவே இறைஆசீர் எனும் புதையலையல்லவா? அனைவரிடமிருந்தும் எம்மை வேறுபடுத்தியவாறு இறைவன் எம்மை எடுத்துச் செல்லும் இவ் வாழ்க்கை எவ்வளவு அதிஷ்டமானது? அதற்காக நாம் ஆண்டவருக்கு எவ்வளவு புகழ்ச்சி செய்ய வேண்டியவர்கள் இல்லலையா?
- புபுது பாடல் : பொருத்தமான பாடலை பாடவும்

03. நற்செய்தி

புனித மத்தேயு 4:17, புனித மாற்கு 1:15 வாசிக்கவும் **“மனம் மாறுங்கள் நற்செய்தியை நம்புங்கள்”** இந் நற்செய்தி எவ்வாறானது? (சிறு குழுக்களில் பகிர்ந்து கொள்ளுங்கள்)

- ஆண்டவர் எந்நேரமும் கதைத்தது அரசைப் பற்றியே அது இயேசுவின் வாழ்வினை ஆக்கிரமித்தது. அரசினை அவரது வாழ்வினின்று வேறுபடுத்திட முடியாது. நம்பும் படியாக கேட்கப்படுகின்ற நற்செய்தி என்ன? அது இறைஅரசுபற்றிய நற்செய்தி அது அப்பா தந்தையை பற்றியது. அதனை நம்புங்கள், விசுவசியுங்கள் எனக் கேட்கிறார்கள்.
- ஆண்டவர் நம்பிக்கை கொண்ட தந்தையின் அரசைக் குறித்து மாபெரும் மகிழ்ச்சியில் இருந்தது மட்டுமல்ல அதனினும் ஒளியாக செயல்பட்டார். தமக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்த தூதுசேவையைப் பற்றியும் மரணம் குறித்தும் மிகவும் நன்றாகத் தெரிந்துவைத்திருந்தார். அடிக்கடி தனது சீடர்களுக்கும் அது குறித்து வெளிப்படுத்தினாலும் ஒருபோதும் கலக்கமுறவோ வாடிய முகத்தோடோ இருக்கவில்லை. எவ்வித பயமோ குழப்பமோ அவருக்குள் இருக்கவில்லை. எல்லா சவால்களுக்கும் பயமின்றி முகங்கொடுத்தார்.
- சீடர்களைப் போன்றே பரிசேயர்கள் சிலரும் தங்கள் ஆசானுக்கு முகங் கொடுக்க இருக்கும் வாழ்வின் எச்சரிக்கைகளை அறிந்திருந்தார்கள். **“இங்கிருந்து போய்விடும் ஏனெனில் ஏரோது உம்மைக் கொல்லவேண்டும் என்றிருக்கிறான்”** என்று கூறினார்.

அதற்கு அவர் கூறியது **“இன்றும் நாளையும் பேய்களை ஓட்டுவேன், பிணிகளைப் போக்குவேன் மூன்றாம் நாளில் என் பணி நிறைவு பெறும் என நீங்கள் போய் அந்த நரியிடம் கூறுங்கள்”** (புனித லூக்கா 13:31-32) என்றவாறு சவால் விட்டது அபிமானமிகு இறைமகனாக நாட்டின் ஆளுனருக்கே.

- தனது வாழ்வைப் பற்றி கவலைப்படாமல் ஆண்டவர் வெளிப்படுத்தும் நற்செய்தியைப் பற்றி நற்செய்தியாளர்கள் நமக்குக் கூறுவது என்ன?
  மணமான தம்பதியினருக்கு குழந்தை கிடைக்கப்போகும் செய்தி, தனது பிள்ளை பரீட்சையில் உயர் பெறுபேற்றினை தனதாக்கிக் கொண்ட செய்தி, அவர்களுக்கு நற்செய்தி. நற்செய்தியாளர்கள் எம்மிடம் கேட்பது அவ்வாறானதொன்றல்ல. எமக்குக் கூறுவது உயிர்த்த இயேசுஆண்டவரை நம்புமாறே. முழு உலகினதும் மீட்பர் அவரே என்பதை விசுவசிக்குமாறு கூறுகின்றனர்.
- இயேசுஆண்டவர் மனிதனை பரிணாமத்திற்கு உள்ளாக்கக் கூடிய வல்லமை பொருந்தியவர் திருப்பலியில் நாம் பெற்றுக் கொள்ளும் திவ்விய நற்கருணையினூடாக உயிருள்ள அவரை எமக்குள் பெற்றுக்கொள்ளும் நாம் அதிஷ்டசாலிகள் திவ்விய நற்கருணை வழியாக நாம் பெற்றுக் கொள்வது இயேசுக்கிறிஸ்து ஆண்டவரின் திருச்சரீரத்தை திரு இரத்தத்தை இந்த வல்லமைமிக்க அருட்சாதனம் பற்றி உலகம் முழுவதும் நற்செய்தியை பறைசாற்றும் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். வெளிப்படுத்துகின்றனர். கிறிஸ்தவர்கள் திவ்விய நற்கருணைப் பெறுவதன் வழியாக அவர்கள் மாபெரும் புதுமையை அனுபவிப்பதாக. அவர்கள் அதன் மூலம் நிறைவேற்றுவது தங்கள் ஆசானின் வேண்டுதலாகிய இதோ எனது உடல் இதோ எனது இரத்தம் என் நினைவாக இதைச் செய்யுங்கள்.
- ஏழைகள், அனாதரவானவர்களே இறைஅரசின் உண்மையான உரிமையாளர்கள் எதனாலும், எவராலும் அதனைப் பறித்து விட முடியாது. (சிறு குழுக்களில் கலந்துரையாடவும்)

04. வாரம் முழுவதும்

அன்றாடம் காலையில் விழித்திடும் போது உங்கள் இறை உரிமையை நினைவு படுத்துங்கள் அதன் அபிமானத்தை உரிமையாக்கிக் கொள்ளுங்கள். ஆதனை அன்றைய நாளில் அனுபவமாக்கிட முயலுங்கள்.

- முடியுமான எல்லா சந்தர்ப்பத்திலும் திருப்பலியில் கலந்துகொண்டு திவ்வியநற்கருணையை பெற்றுக் கொள்ளுங்கள். நேரம் கிடைக்கையில் திவ்வியநற்கருணைநாதர் முன்னிலையில் தோன்றி நில்லுங்கள்.

05. இறுதிப் புகழ்ச்சி